සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 08 - 2023 (2024)
Third Term Test - Grade 08 - 2023 (2024)

# இஸ்லாம்

நேரம்: 2 மணி.

சுட்டெண்:

## பகுதி I

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. இஸ்லாமிய மாதங்களில் ரமழான் எத்தனையாவது மாதமாகக் காணப்படுகின்றது?
   i. எட்டு  ii. ஒன்பது  iii. பத்து  iv. பன்னிரெண்டு
2. பாவங்களில் இருந்து எம்மை தூய்மைப்படுத்தும் மாதமே உன் வருகை நல் வரவாகட்டும் என்ற கூற்று,
   i. நபி (ஸல்) கூற்று  ii. அபூபக்கர் (ரழி) கூற்று
   iii. உமர் (ரழி) கூற்று  iv. உஸ்மான் (ரழி) கூற்று
3. ஸகாத் என்ற பதத்தின் மொழிக் கருத்து.
   i. தூய்மை  ii. வரி  iii. செல்வம்  iv. பணம்
4. யதீம் என்ற சொல் குறிப்பது.
   i. அநாதை  2. பணக்காரன்  iii. ஆசிரியர்  iv. அறிஞன்
5. அல்லாஹ்வால் அருளப்பட்ட இறுதி வேதம்
   i. தௌராத்  ii. சபூர்  iii. இன்ஜீல்  iv. புர்கான்

(2 x 5 = 10 புள்ளிகள்)

**02. மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**
**(ஹிப்ரு, அபுல்பஸர், முஃஜிஸா, துஆ, அல் அமீன், இஃலாஸ்)**

1. மூஸா (அலை) அவர்களுக்கு தௌராத் வேதம் ______________________ மொழியில் அருளப்பட்டது.
2. அரபு மொழியில் அற்புதத்தை ______________________ எனக் குறிப்பிடுவர்.
3. ஆதம் (அலை) அவர்கள் ______________________ என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார்கள்.
4. வணக்கங்களில் தலையாயது ______________________ என நபி(ஸல்) குறிப்பிட்டார்கள்.
5. குறைஷிக் காபிர்கள் நபி (ஸல்) அவர்களை ______________________ என்ற பெயர் கொண்டு அழைத்தார்கள்.

(2 x 5 = 10 புள்ளிகள்)

**03. சரியாயின் சரி (✓) எனவும் பிழையாயின் பிழை (×) எனவும் குறிப்பிடுக.**

1. சூரதுல் மாஊன் அல் குர்ஆனில் 107 வது அத்தியாயம் ஆகும். ( )
2. அஜ்னபி என்போர் திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டவர் ஆவார். ( )
3. அலி (ரழி) அவர்கள் ஹஸன் (ரழி) யின் மகனாவார். ( )
4. இபாதா என்பது தொழுகையை மாத்திரம் குறிக்கும். ( )
5. தொழுகையில் ஒரு விடயத்தை மறந்தால் ஸஜதா ஸஹ்வு செய்ய வேண்டும். ( )

(2 x 5 = 10 புள்ளிகள்)

4. **A** பகுதிக்கு பொருத்தமானதை **B** பகுதியில் இருந்து தெரிந்து இணைக்குக.

| A | B |
|---|---|
| 1. அல் குர்ஆன் | இமாரத் |
| 2. பர்ளு கிபாயா | மனைவியின் சகோதரி |
| 3. உலுல் அஸ்ம் | ஆலிமை உருவாக்குதல் |
| 4. நிரந்தர மஹ்ரமி | வஹி மத்லூவ் |
| 5. பூமியை வளப்படுத்தல் | திட உறுதிபூண்டவர்கள் |
| | பாட்டி |

(5 x 2 = 10 புள்ளிகள்)

## பகுதி II

- **பகுதி இரண்டில் முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றில் 4 வினாக்களுமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

எல்லா வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1. நபி இப்றாஹீம்(அலை) அவர்களின் இரண்டு மனைவிமார்களின் பெயர்களைத் தருக?
2. ஆத், ஸமூத் ஆகிய சமூகங்கள் அழிக்கப்பட்டதற்கான காரணம் யாது?
3. வலீமா எச்சந்தர்ப்பத்தில் வழங்கப்படும்?
4. பெரும் பாவங்கள் இரண்டை குறிப்பிடுக?
5. அல் அமீன், அஸ்ஸாதிக் என்பதன் கருத்துக்களை தருக?
6. ஹதீஸின் வகைகள் இரண்டை குறிப்பிடுக?
7. வஹியின் பிரிவுகள் இரண்டை தருக?
8. சஜதா திலாவத் செய்யப்படும் சந்தர்ப்பத்தை குறிப்பிடுக?
9. ஆமுல் ஹுஸ்ன் ஆண்டோடு தொடர்புபடும் இரண்டு நபர்களைக் குறிப்பிடுக?
10. சுனன் அர்பஆ கிரந்தங்களில் இரண்டை தருக?

(2 x 10 = 20 புள்ளிகள்)

02. 1. தொழுகையின் பயன்கள் மூன்று தருக?
2. ஸகாத், சதகா ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் மூன்று எழுதுக?
3. பிரார்த்திக்கும் போது கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள் நான்கு தருக?

(3+ 3+4 = 10 புள்ளிகள்)

03. 1. பால்குடி உறவின் மூலம் உருவான மஹ்ரமிகள் மூவரைக்குறிப்பிடுக?
2. ஒரு முஸ்லிம் தவிர்ந்து கொள்ள வேண்டிய துர்க்குணங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
3. ஒரு மாணவன் கடைபிடிக்க வேண்டிய நற்குணங்கள் நான்கு தருக?

(3+ 3+4 = 10 புள்ளிகள்)

04. 1. ஹலால், ஹராம் என்றால் என்ன?
2. நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்கள் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக?
3. மவ்ழூஆன ஹதீஸ்கள் தோற்றம் பெற்றதற்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக?

(3+ 3+4 = 10 புள்ளிகள்)

05. 1. உள்ளம் மென்மைடையவும், இலட்சியம் நிறைவேறவும் யாருடன் இரக்கமாக நடந்து கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்?

2. அல்லாஹ்வும் நபி (ஸல்) அவர்களும் தடுத்த பெரும் பாவங்கள் மூன்றை குறிப்பிடுக?

3. சமூகப்பணிகள் நான்கினைக் குறிப்பிடுக?

(3+ 3+4 = 10 புள்ளிகள்)

06. 1. இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட பயணங்கள் மூன்று தருக?

2. பயணத்தின் பொழுது கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள் மூன்றை தருக?

3. பயணத்தோடு தொடர்பான துஆ ஒன்றினைக் குறிப்பிடுக?

(3+ 3+4 = 10 புள்ளிகள்)

07. 1. உம்மஹாதுல் மு.ஃ.மினீன் என்போர் யார்?

2. பொதுச் சொத்துக்கள் மூன்றை தருக?

3. உங்களுக்குத் தெரிந்த நான்கு சகாபாக்களின் பெயர்களை குறிப்பிடுக?

(3+ 3+4 = 10 புள்ளிகள்)